1989 ஏப்ரல் 21] [திரு. கே. ஆர். இராஜேந்திரன்]

வேண்டும். உலகில் ஆயிரம் பெண்களுக்கு 900 ஆண்கள் தான் உள்ர். ஆண் இனம் பாதுகாக்கப்பட்டு பெருக்கப்பட்டால் இன்று சமுதாயத்தில் உள்ள வரதட்சிணை கொடுமைகூட ஒழிய வாய்ப்பு உண்டு. எனவே இன்று வளர்ந்து வரும் சமுதாயத்தில் பெண்களுக்குள்ள சரிசமமான உரிமையைக் கருத்தில் கொண்டு ஆண்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டுமாய் இவ்வரசை கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் பேசிக் கொண்டு இருந்தவர் கடைசியில் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே அவர்களுக்கு ஆதிக்கம் இருக்கிறது என்பதனால்தான், பெண்களுக்கு உரிமை கிடைக்கவில்லை என்பதனால்தான் இந்த ஏற்பாடு. அதுவும் தாய்க்குலத்தைப்பற்றி அதிகமாகப் பேசிக் கொண்டிருந்த ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் அவர் இப்படிப்பட்ட ஒரு கருத்தைச் சொல்லியதைப் பற்றி என்னுடைய வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாகவே பல வீடுகளில் யார் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதில் இன்னும் முடிவு இல்லாமல் இருப்பதனால்தான் அப்படி ஒரு பிரச்சினை நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் நான் நடுவர் என்ற முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தாங்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள் என்பதை நாங்கள் இப்போது நன்றாகப் புரிந்து கொண்டோம். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதைப் பேசியதே நம்முடைய உணவு அமைச்சருக்காகத்தான் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. (சிரிப்பு)

6. அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது பேரவைக்கு ஒரு அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடை பெறும். இன்று மாலை பேரவைக் கூட்டம் இல்லை. (மேசை தட்டும் ஒலி) பிற நாட்களிலும் பேரவைக் கூட்டம் மாலையில் இல்லை.

	மானியக் கோரிக்கை எண்.
22–4–1989 (சனிக்கிழமை)	32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன்
23–4–1989 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை

24–4–1989 (திங்கட்கிழமை)	26—கைத்தறியும் துணி தொழிலும்
	34—நகர்ப்புற வளர்ச்சி
25–4–1989 (செவ்வாய்கிழமை)	23—கூட்டுறவு
	35—நுகர்பொருள் வழங்கல்
26–4–1989 (புதன்கிழமை)	4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும், நிருவாகம்.
	9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்
	11—மாவட்ட நிருவாகம்
	42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும்
	43—பல்வகை
	58—பல்வகை மூலதனச் செலவு
	59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்
27–4–1989 (வியாழக்கிழமை)	2—மாநில ஆயத் தீர்வைத் துறை
	15—காவல் துறை
28–4–1989 (வெள்ளிக்கிழமை)	16 – தீயணைப்புப் பணிகள்
29–4–1989 (சனிக்கிழமை)	31— பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன்
30–4–1989 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை
1–5–1989 (திங்கட்கிழமை)	விடுமுறை
2–5–1989 (செவ்வாய்க்கிழமை)	10—பால் வழங்கு திட்டங்கள்
	21—மீனளம்
	22—கால்நடை வளர்ச்சி
3–5–1989 (புதன்கிழமை)	24—தொழில்கள்
	51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு
4–5–1989 (வியாழக்கிழமை)	(1) 7—மாநிலச் சட்டமன்றம்
	8—தேர்தல்கள் 1-00 மணிக்கு வாக்கெடுப்பு
	(2) 1989–90ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல்.

5–5–1989 (வெள்ளிக்கிழமை)	காலை	1989–90 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.
	மாலை 6 மணி முதல் 8 மணி வரை	தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 50 ஆம் ஆண்டு நிறைவு விழா. மூத்த உறுப்பினர்களை சிறப்பித்தல்.
6–5–1989 (சனிக்கிழமை)		அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும் மற்றும் அரசினர் தீர்மானங்கள் அலுவல்கள்.
7–5–1989 (ஞாயிற்றுக் கிழமை)		விடுமுறை
8–5–1989 (திங்கட் கிழமை)		தேவையிருப்பின் பேரவை கூடும்

அது பின்னால் அறிவிக்கப்படும்.

5. மானியக் கோரிக்கைகள் 1989–90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு திருமதி சுப்புலெட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் துறை, சமூக நலம், ஊரக வளர்ச்சி பற்றிய மானியக் கோரிக்கைகளின் விவாதத்திலே கலந்து கொண்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், இந்தத் துறை செயல்பட வேண்டிய முறைகளைப் பற்றி சிறப்பான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்தத் துறையினுடைய பொறுப்பேற்றிருக்கின்ற எனக்கு அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற ஆலோசனைகள் நிச்சயமாக வழிகாட்டியாக அமைந்து நான் ஏற்றுக்கொண்டிருக்கின்ற இந்த முயற்சி வெற்றிபெறுவதற்கு அவை உறுதுணையாக அமையும் என்று நான் நம்புகின்றேன். பொதுவாக இங்கே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் சமூக நலம் அதில் பெண்களுடைய முன்னேற்றம், அந்தத் துறையின் மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற சத்துணவுத் திட்டம், குழந்தைகள் நலம் இவைகளைப் பற்றியும், கதர் துறையின் மூலமாக பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதில் கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் இந்தத் துறையின் மூலமாக எவ்வளவு நல்ல திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதைப் பற்றியும், ஊரகத் தொழில் மானியக் கோரிக்கையின் கீழ் உரையாற்றியவர்கள் சிறுதொழில் ஆரம்பிப்பதிலே உள்ள இடர்பாடுகள், மூலப்பொருள் வழங்குவதில் ஏற்படுகின்ற சங்கடங்கள், உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களை விற்பனை செய்வதிலே ஏற்படுகின்ற பிரச்சினை